# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் 4
ஜூன் 2022
விருந்து 13



தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கிய மின்னிதழ்



குடில் 4 ஜூன் 2022 விருந்து 13

தமிழ்த்துறை

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

| | |
|---|---|
| ஆசிரியர் குழு : | அ. ஸ்டெல்லா மேரி<br>முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு<br><br>பெ. சாந்தி<br>முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு<br><br>மு. ரம்யா<br>இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு<br><br>ரா. பிரியதர்ஷினி<br>இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு<br><br>சா. பவித்ரா<br>இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு |
| ஆலோசனைக் குழு : | டாக்டர் சேது குமணன்<br>கல்லூரித் தலைவர்<br><br>முனைவர் மீரா முருகேசன்<br>கல்லூரி முதல்வர்<br><br>முனைவர் கண்மணி சுப்பிரமணியன்<br>கல்லூரித் துணை முதல்வர்<br><br>முனைவர் தே. இராணி எலிசபெத்<br>தமிழ்த் துறைத்தலைவர்<br><br>தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |
| வெளியீடு : | தமிழ்த்துறை<br>சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு<br>சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி<br>சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,<br>சென்னை 600 099. |
| *Blog* : | *sokatamil blogspot.com* |
| *Facebook* : | *Soka Tamil Avai* |
| *Youtube* : | *Sokatamilavai* |
| *E.mail* : | *sokatamilavai2021@gmail.com* |

# நற்றமிழ்க்குடில்

குடில் : 4

விருந்து 13

ஜூன் 2022

தமிழ்த்துறை

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

# உள்ளே....


தலையங்கம்

கட்டுரைகள்

நூல் அறிவோம்

அறிவியல் செய்திகள்

அறிஞரை அறிவோம்

விடுகதைகள்

பொன்மொழிகள்

சொல் விளையாட்டு

கவிதைகள்

தகவல் களஞ்சியம்

தூரிகைத் தூரல்கள்

துறை நிகழ்வுகள்

# தலையங்கம்

## ஓவியம்

சங்க காலம் முதற் கொண்டே ஓவியக்கலைகள் சிறப்புற்று விளங்கியதைச் சங்க இலக்கிய நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. எந்த மொழியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும் ஓவியம் பொதுவானதான கருத்துக்களைத் தெரிவிப்பதாக அமைகிறது.

தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்பே ஓவியங்கள் வரையப்பட்டன. ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்று அழைத்தனர். ஓவியம் வரைவதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு ஆகியவை அடிப்படையானது. அவ்வாறு வரையப்படும் ஓவியங்கள் கோட்டோவிகள் என வழங்கப்பட்டன.

ஓவியக்கலையினை ஓவ, ஓவம், ஓவியம், சித்திரம், படம், வட்டிகைச் செய்தி என்றும் ஓவியக் கலைஞர்களை ஓவியர், ஓவியப் புலவன், கண்ணுள் வினைஞர், சித்திரகாரர், வித்தகவினைஞர், வித்தகர், கிளவி வல்லோன் என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன.

இலக்கண நூலுக்கு உரை எழுதும் போது நச்சினார்க்கினியர் தம் உரையில் ஓவியருக்கு "நோக்கினார் கண்ணிடத்தே தம் பொருள் நிறுத்துவோர்" என இலக்கணம் வகுத்துள்ளார்.

### தமிழரின் ஓவிய மரபுகள்

நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆகிய மனிதனின் மூன்று நிலைகளில் ஓவியங்கள் வரையப்பட்டன.

ஓவியங்களில் ஒன்பது வகை மெய்பாடுகளுள் வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை ஆகிய மெய்ப்பாடுகள் வெளிப்படும் வகையில் வரையப்பட்டன.

உத்தமம், மத்திமம், அதமம், தசதாளம், நவதாளம், பஞ்சதாளம் ஆகிய அளவைகளை வலியுறுத்துவதாகத் தமிழரின் ஓவிய மரபுகள் அமைகின்றன.

சங்க இலக்கியத்தில் ஓவியத்தைக் குறிக்க ஓவம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் (புறம் : 251) வீடு, நகர், கட்டிடம் ஆகியவற்றை ஓவியத்திற்கு ஒப்பிட்டு சங்க இலக்கியத்தில் செய்திகள் உள்ளன.

ஓவியம் வரைவதற்குப் பயன்படுத்தப்பட்ட தூரிகையைத் துகிலிகை "ஓவ மாக்கள் ஒள்ளரக் கூட்டிய துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி" (நற்றிணை 118) என நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது.

வண்ணம் தீட்டாமல் கோடுகளால் மட்டும் வரையப்படும் புனையா ஓவியம் பற்றிய குறிப்புகள் நெடுநல்வாடையில் இடம்பெற்றுள்ளன. "புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்" (நெடு.147).

நெடுநல்வாடையில் சுவர்கள் மீது வண்ண ஓவியங்கள் வரையப்பட்டதையும், பட்டினப் பாலையில் சோழர் அரண்மனையில் வெளிப்புறச் சுவர்களில் ஓவியம் தீட்டப்பட்டதையும், பரிபாடல் மதுரையில் எழுத்து நிலை மண்டபம் இருந்ததையும் வரையப்பட்ட ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. ஓவியம் சங்க காலம் தொடங்கி சமகாலம் வரையில் மனித மனத்தின் உள்ளுணர்வின் வெளிப்பாடாகத் திகழ்கிறது.

**அ. ஸ்டெல்லா மேரி**
**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# உலகக் கலை நாள்

பன்னாட்டுக் கூட்டமைப்பு, ஏப்ரல் 15ஆம் நாளை உலகக் கலைகள் நாளாக அறிவித்துள்ளது.

குவாடல்ஜராவில் நடைபெற்ற கலைகளுக்கான பன்னாட்டுக் கூட்டமைப்பு தன்னுடைய 17ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில், ஏப்ரல் 15ஆம் நாளை உலகக் கலை நாளாகக் கொண்டாடப் பரிந்துரைக்கப்பட்டது.



உலகப் புகழ் ஓவியர் லியோனர்டோ டாவின்சியின் பிறந்த நாளை சிறப்பிக்கும் பொருட்டு இக்கலை நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

உலக ஓவிய நாளை முன்னிட்டு தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறை, படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஓவியப் பயிற்சி முகாம்கள் மற்றும் ஓவிய கலைக்காட்சிகள் நடத்த அரசாணை வெளியிட்டு, தொடர்ந்து இந்நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

**மு.ரம்யா**

**இளங்கலைத்தமிழ்**

**மூன்றாமாண்டு**

# ஓவியக் கண்காட்சி

# ஓவியர் புகழேந்தி

தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஓவியர் புகழேந்தி. இந்திய ஓவியக் கலைகளின் முன்னோடியாக



அறியப்படுகிறார். வண்ண ஓவியத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்றவர். தற்போது சென்னை கவின் கல்லூரியில் ஓவியப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். 37 ஆண்டுகளாக ஓவியராகப் பணியாற்றி வருகிறார்.

ஓவியங்களை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க, தஞ்சாவூர் சுற்று வட்டாரப்பகுதிகளில் பல இடங்களில் தன்னுடைய ஓவியங்களைக் கொண்டு ஓவியக் கண்காட்சியை நடத்தியுள்ளார். 1983ஆம் ஆண்டு தஞ்சை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பெற்ற ஓவியக் கண்காட்சியில் இவரது ஓவியங்கள் பலரின்



பாராட்டுக்களைப் பெற்றது சிறப்புக்குரியது.

2000ஆம் ஆண்டு சென்னை லலித்கலா அகாதமியில் நடைபெற்ற "இருபதாம் நூற்றாண்டு - ஒரு தூரிகையின் உறங்கா நிறங்கள்" என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சியில் இவரது ஓவியங்கள் இடம்பெற்றன. தேசிய அளவில், சென்னை, ஐதராபாத், லக்னோ, பெங்களூர், மும்பை ஆகிய நகரங்களில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் இவரது ஓவியங்கள் இடம் பெற்றன. மேலும் இவர், பல தனிநபர் கண்காட்சிகளையும் தொடர்ந்து நடத்தியுள்ளார்.

தந்தை பெரியாரின் பன்முகத்தோற்றத்தைப் பல பரிமாணத்தில் வரைந்து “திசைமுகம்” என்னும் தலைப்பில் இவர் நடத்திய ஓவியக் கண்காட்சி தமிழகத்தின் 25 முக்கிய நகரங்களில் நடைபெற்றது.

உறங்கா நிறங்கள் எனும் தலைப்பில் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிலும், திசைமுகம் எனும் தலைப்பில் சிக்காகோ, வாசிங்டன், கனடா, பாரிஸ் ஆகிய பெருநகரங்களிலும் உயிர்ப்பு என்ற தலைப்பில் சென்னை மற்றும் மதுரையில் இவரது ஓவியக்கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

தமிழகத்தில் சென்னை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, Alliance Francaise of Madras ஆகிய இடங்களிலும் நார்வே, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளின் பல நகரங்களிலும் போர் முகங்கள் குறித்த ஓவியக்கண்காட்சிகள் நடைபெற்றன.

வண்ணங்கள் மீதான வார்த்தைகள் எனும் தலைப்பில் இவரது ஓவியங்களுக்குப் பொதுமக்கள் அளித்த நற்கருத்துகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். மேலும் எரியும் வண்ணங்கள், திசை முகம், முகவரி, அதிரும் கோடுகள், சிதைந்த கூடு, புயலின் நிறங்கள் ஆகிய தலைப்புகளின் ஓவியம் தொடர்பான நூல்களை வெளியிட்டுள்ளார்.



தூரிகைச் சிறகுகள் என்ற தலைப்பில் அமெரிக்க ஐரோப்பிய வெளிநாட்டு பயண அனுபவ நூலும், அகமும் முகமும் என்ற தலைப்பில் நேர்காணல்களின் தொகுப்பும், நெஞ்சில் பதிந்த நிறங்கள் என்ற தலைப்பில் இவரது ஓவியங்கள் பற்றி இதழ்களில் வந்த கட்டுரைகளின் தொகுப்பும், மேற்குலக ஓவியர்கள் என்ற தலைப்பில் ஐரோப்பிய ஓவியர்கள் – ஓவியங்கள் வரலாறும் வெளிவந்துள்ளன. ஓவியத்திற்காகப் பல விருதுகளைப் பெற்ற சிறப்புக்குரியர் இவர்.

**இ. விஜயலட்சுமி**
**இளங்கலைத் தமிழ்**
**இரண்டாமாண்டு**

## கட்டுரைகள்

# பிக்காசோ

பிபாஸ்ஸோ பாப்லோ டியாகோ ஜோஸ் பிரான்சிஸ்கோ டி பாலா ஜுவான் நேபூமுக்கனோ மரியா டி லாஸ் ரெமிடியஸ் சிப்ரியோ டி லா சாண்ட்சிமா டிரினிடாட் ரூயிஸ் ய பிக்காசோ என்பதே பாப்லோ பிக்காசோ என்ற ஓவியரின் முழுமையான பெயர் ஆகும். இவர் 25.10.1881ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிலுள்ள மலகாவில் ஜோச் ரூயிசு பால்சுகா மரியா பிக்காசோ ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.



இவரது தந்தை ஓவியராக இருந்ததால், தந்தையிடமிருந்து ஊக்கத்தைப் பெற்ற பிக்காசோ ஏழு வயதிலிருந்தே ஓவியங்களை வரைந்தார்.

ஓவியர், சிற்பி, அச்சுப்பொறியாளர் மண்பாண்டக் கலைஞர், மேடை வடிவமைப்பாளர், கவிஞர், நாடக ஆசிரியர் எனப் பிக்காசோ பன்முகத்தன்மைக் கொண்ட கலைஞர்.

பிக்கோசோவின் படைப்புகள் நீலக்காலம், ரோசா சிறக் காலம், ஆப்பிரிக்க தாக்கக் காலம், பகுப்பாய்வு கியூபிசக் காலம் எனக் கால அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளன. இவர், ஓவியம், சிற்பம், அச்செடுத்தல், செராமிக் ஓவியங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

இன்று அமைதியின் சின்னங்களாகத் திகழும் புறா மற்றும் ஆலிவ் இலைகளை பிரபலப்படுத்திய பெருமைக்குரியர்.

இவரது படைப்புகள், 1885 சிற்பங்கள், 1228 ஓவியங்கள், 2880 பீங்கான் மண்பாண்டச் சிற்பங்கள், 12000 சாதாரணச் சித்திரங்கள், 12000 திரைச்சீலை வேலைப்பாடுகள் போன்றவை பிரான்சின் பாரிஸ் அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

ஓவியத்தின் மீது கொண்ட விடாத அன்பினால், பிக்காசோ தனது தொண்ணூறு வயதிலும் தூரிகையைால் விடாது வரைந்து கொண்டே இருந்தார். தன்னுடைய 90ஆவது பிறந்தநாள் விழாவில் ஒரு மாதத்திற்குள் அவர் வரைந்த எட்டு ஓவியங்களைப் பாரிஸ் ஜாவர் அருங்காட்சிக்கு வைத்து வரலாற்றில் தனக்கு என்று ஒரு நீங்காத தனி இடத்தைப் பிடித்தார்.

பிக்காசோ 93ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடல் பிரான்ஸின் தெற்கில் உள்ள வாவெனார்கஸ் கிராமத்தில் உள்ள செட்யூ என்ற இடத்தில் உள்ள அவரது ஸ்டுடியோவின் வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அவர் மறைந்தாலும் அவரது புகழை இன்றும் நம்மிடையே பறைசாற்றிக் கொண்டிருப்பவைகள் அவரது உயிரோட்டமுள்ள ஓவியங்கள் என்றால் அது மிகையானதன்று.

**அ. ஸ்டெல்லா மேரி**
**முதுகலைத் தமிழ்**
**இரண்டாமாண்டு**

# லியொனார்டோ டா வின்சி



லியொனார்டோ டா வின்சி அல்லது இலியனார்தோ தா வின்சி 1452ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் பிறந்தார்.

இவர் உலகப் புகழ்பெற்ற ஓவியர். அதுமட்டுமல்லாது, இவர் ஒரு இத்தாலிய மறுமலர்ச்சிக் கட்டடக் கலைஞர், கண்டு பிடிப்பாளர், பொறியியலாளர், சிற்பி மற்றும் ஓவியரான இவர் பல்துறை வல்லுநராக விளங்கியவர். இவரது உலகப் புகழ் பெற்ற ஓவியங்கள், "கடைசி விருந்து" மற்றும் "மோனாலிசா" ஆகும். இவர் பல கண்டுபிடிப்புகளுக்கு உரிமையாளர். உடற்கூற்றியல், வானியல், குடிசார் பொறியியல் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர்.



இவர் 1519ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் இயற்கை எய்தினார். இவருடைய மோனாலிசா மூலம் நம்முடன் புன்னகைத்துக் கொண்டிருக்கிறார்.

மா. ஜெகதீஸ்வரி

இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

# தமிழ்நாட்டு ஓவியக் கலை

தமிழ்நாட்டு ஓவியக்கலை மிகவும் பழமையான வரலாற்றைக் கொண்டதாகும். மனிதன் குகைகளில் வாழ்ந்த காலம் முதலே குகை ஓவியங்கள், சுவர் ஓவியங்கள் என ஓவியங்கள் உருவாகத் தொடங்கி விட்டன. வெவ்வேறு காலக்கட்டங்களைச் சேர்ந்த ஓவியங்கள் குகைகள், அரண்மனைகள், கோயில்கள் தமிழனின் ஓவியக்கலைக்குச் சான்றாக விளங்குகின்றன.

**பாண்டியர் கால ஓவியங்கள்**

பாண்டியர் கால ஓவியங்களின் தற்போது காணக் கிடைப்பவை சித்தன்னவாசல் மற்றும் திருமலைபுரம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள ஓவியங்களே ஆகும்.

பாண்டியர் காலத்தில் புகழ் பெற்ற சித்தன்ன வாசல் குகை ஓவியங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இவை கி.பி.7, கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சித்தன்ன வாசல் ஓவியங்கள் சமணர்களால் மூலிகை வண்ணங்களைக் கொண்டு வரையப்பட்டவை.

சித்தன்ன வாசல் குடைவரைக்கோயிலின் மேல் விதானத்தில் நடு மண்டபத்தில் இயற்கைச் சூழலைச் சித்திரிக்கும் தாமரைத் தடாகம் தீட்டப்பட்டுள்ளது. அதில் நீர் தெரியாத அளவிற்கு மலர்களும் இலைகளும் சூழ்ந்திருப்பது போன்று அமைந்துள்ளது. அல்லி மற்றும் தாமரை மலரின் அரும்பு முதல் மலர் வரையிலான வளர்ச்சி நிலைகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. மீன்கள் துள்ளி விளையாடுதல், யானைகள் தாமரைக் காம்புகளை ஒடித்து விளையாடுதல், எருமைகள் நீரில் மூழ்கி மகிழ்தல்,

அன்னம் நீரில் நடனம் புரிதல் ஆகியக் காட்சிகள் அழகாகத் தீட்டப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோயிலிலுக்கு அருகில் உள்ள ஊர் திருமலைபுரம் ஆகும். இங்குள்ள குகையின் மேற்கூரையில் பாண்டியர் கால ஓவியங்கள் உள்ளன. இதில் பிரம்மன், சிம்மன், ஆண் பெண் கூட்டமாக இருத்தல், இயற்கை காட்சிகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. ஓவிய வண்ணங்களாக மஞ்சள், சிவப்பு, கருப்பு, நீலம், பச்சை ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரிட்டாபட்டி, திருமலைப்புரம், ஆனைமலை, கீழ்க்குயில்குடி, கீழவளவு, கரடிப்பட்டி ஆகிய இடங்களிலும் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் காணப்படுகின்றன.



**கீழவளவு பாறை ஓவியம்**



**அழகர் கோயில் பாறை ஓவியம்**

**பல்லவர் கால ஓவியங்கள்**

பல்லவர் காலத்தில் கோயில் பலவற்றில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. பல்லவர் கால ஓவியங்கள் பல அழிந்துவிட்டன, ஓவியத்தில் தீட்டப்பட்ட வண்ணங்களின் எச்சங்களைக் கொண்டு ஓவியங்கள் இருந்ததாக அறியமுடிகிறது. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் ஓவியக் கலையில் சிறந்து விளங்கியமையால் விசித்திரசித்தன், சித்ரகாரப்புலி

ஆகிய பட்டங்களைப் பெற்றான். பல்லவ மன்னன் இராசசிம்மன் கால ஓவியங்கள் காஞ்சி கைலாச நாதர் கோயில், பனைமலை தாலகிரீசுவர் கோயில்களில் உள்ளன.

பல்லவர் காலத்து ஓவியங்கள் மாமண்டூர், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனைமலை, ஆர்மாமலை, நீலகிரி அம்மன் கோயில் ஆகிய இடங்களில் உள்ளன.

**சோழர் கால ஓவியங்கள்**

சோழர் காலத்து ஓவியத்தில் மிஞ்சி இருப்பது தஞ்சை பெரிய கோயிலில் உள்ள ஓவியம் மட்டுமே ஆகும். தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சோழர் காலத்து ஓவியத்திற்கு மேல் நாயக்கர் காலத்தில் வேறு ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. தொல்லியல் துறையினர் இரசாயன முறைப்படி மேலே இருந்த நாயக்கர் கால ஓவியத்தை அகற்றி சோழர்களின் ஓவியத்தை உலகறியச் செய்தனர்.

இந்த ஓவியங்கள் கோயில் பிரகாரத்தின் உட்சுவர்களின் மேற்கு மற்றும் வடக்குப் பக்கங்களில் தீட்டப்பட்டுள்ளன. சுவரில் கயிலைக் காட்சி, தடுத்தாட்கொண்ட நிகழ்வு, சேரமான் பெருமாள் நாயனார் சிவனை வழிபடல், திரிபுரங்களின் வீழ்ச்சி, இராசராசன் கருவூர்த் தேவர் ஆகிய ஓவியங்கள் அழகுடன் தீட்டப்பட்டுள்ளன.

**விசயநகர – நாயக்கர் ஓவியங்கள்**

விஜய நகர நாயக்கர் ஓவியங்கள் பல்லவர் பாண்டியர் சோழர் காலத்திலிருந்து வேறுபட்ட அமைப்புடையது. நாயக்கர்களின் ஓவியக் கலைப் பாணியை “லெபாக்ஷி பாணி” என்பர். நாயக்கர்களின் குலதெய்வக் கோயில் லெபாக்ஷி வீரபத்ராலயம் ஆகும். இந்தக் கோயிலில் மகாபாரதம், இராமாயணம், புராணங்கள் தொடர்பான ஓவியங்களை வரைந்திருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக நாயக்கரின் ஓவியக்கலை தமிழகத்தில் பரவியதால் இப்பெயரில் அழைக்கப்பட்டது.

நாயக்கர் கால ஓவியங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், அழகர் கோயில், திருவரங்க அரங்கநாதர் கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், கூடலழகர் கோயில், இராசகோபாலச் சுவாமி கோயில், வைகுண்ட நாதர் கோயில், ஏகாம்பர நாதர் கோயில், மன்னார்குடி இராசகோபால சுவாமி கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயில் எனப் பல்வேறு இடங்களில் காணக்கிடைக்கின்றன.

**மோ. தீபா, இளங்கலைத்தமிழ், இரண்டாம் ஆண்டு.**

# அறிவோம் கலைஞரை

## ஏ.பி. ஸ்ரீதர்



ஓவியப் படிப்பேதும் பயிலாமல், தலைசிறந்த ஓவியராக வளர்ச்சிப் பெற்றவர். ஓவியக் கல்லூரியில் படிக்க வாய்ப்பு கிடைக்காத இவர் தொடர்ந்து வேறு எந்த படிப்பும் படிக்காமல் தான் வரைந்த ஓவியங்களுடன் தன் ஓவியப்பயணத்தை உதவி வடிவமைப்பாளராகத் தொடர்ந்தார்.

இவருக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு ஒரு புத்தகத்திற்கு அட்டைப்படம் வரைவது தான். தனது நண்பன் மூலமாக என்.எஸ்.எஸ் சார்பாகப் பிரதமர் ராஜீவ் காந்தி வெளியிடவிருக்கும் புத்தகத்தின் அட்டைப்படம் அது. அட்டைப் படத்தில் வரையப்பட்ட மாணவனின் ஓவியத்தில் வாய்ப் பகுதி மட்டும் வரையாமல், அட்டை படம் வரையும்

படி கூறியிருந்த கல்லூரிப் பேராசிரியர் ஓவியரை அழைத்து வாய் மட்டும் ஏன் வரையவில்லை எனக் கேட்ட கேள்விக்கு என்.எஸ்.எஸ். மாணவன் பேசமாட்டான் அனைத்தையும் செயல்படுத்திக்காட்டுவான் என்பதைக் குறிக்கவே இவ்வாறு வரைந்ததாகக் கூறினார். எந்த ஒரு வேலையைச் செய்தாலும் அது தன் வாழ்நாளில் தனக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பு எனக் கருதி சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும் எனும் எண்ணம் கொண்டவர்.



விடா முயற்சியோடு தன் ஓவியப் பயணத்தைத் தொடங்கிய இவர் இன்று உலக அளவில் புகழ் பெற்ற ஓவியராக இருக்கிறார் ஏ.பி. ஸ்ரீதர் அவர்கள். இவர் கிளிக் ஆர்ட், 3 டி ஓவியம், மெழுகு சிலை போன்றவற்றை உருவாக்கியுள்ளார். அமேசான் காடுகள் தீப்பற்றி எறியும் போது தீயைக் கட்டுப்படுத்த வந்த தீயணைப்பு வீரர்கள் இராணுவ விமானங்கள், தன்னார்வலர்களின் மனித நேயம், துணிச்சல், தைரியம் மற்றும் விடாமுயற்சியை ஊக்குவிக்கும் வகையில் ஓவியங்களை வரைந்துள்ளார்.

சிரியா தேசத்தின் தற்போதைய நிலையினை முன்வைக்கும் நோக்கத்தில் சிரியா மக்களுக்கு உதவிக்கோரும் வகையில் சிரியா மக்களின் நிலையினைக் கோட்டோவியத் தொடராக வரைந்துள்ளார். இவரது ஓவியங்கள் சமூக அக்கரையுடனும் உள்ளன.

இவர் மலேசிய பிரதமருக்கு வரைந்துக் கொடுத்த ஓவியம் மிகவும் சிறப்பு மிக்கது. இவரது ஓவியமே அரண்மனையில் முதலில்

வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் இந்தியாவில் பல முதல்வர்களைச் சந்தித்து ஓவியங்களை வரைந்துக் கொடுத்துள்ளார்.

மோனாலிசாவின் புகைப்படத்தை தனக்கே உரிய பாணியில் 1450 ஓவியங்களை வெவ்வேறு பரிணாமங்களில் வரைந்து வைத்துள்ளார். இவரது அலுவலகத்தில் பிரபல ஓவியர்களின் சிலிக்கான் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. வெள்ளை தோட்டம் அமைக்கும் திட்டத்திற்காக இவரது அலுவலகத்தில் வெள்ளை நிறத்திலான கலைப்பொருட்களைச் சேகரித்து வைத்துள்ளார்.

இவர் முதன் முதலில் 3 டி “தந்திரக் கலை“ அருங்காட்சியகத்தை, சென்னை வி.ஜி.பி.யில் தொடங்கி வைத்தார். அமெரிக்காவில் முதல் தந்திரக்கலை அருங்காட்சியகத்தை Stroneridge Shopping Center (Pleasanton), California வில் அமைத்தார்.



சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்று விண்டேஜ் கேமரா மியூசியம் கேமரா அருங்காட்சியத்தைத தொடங்கினார். இதன் கட்டிட அமைப்பும் கேமரா போன்றே அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 7200 கேமராக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டு தந்திரக்கலை அருங்காட்சியகத்தை மக்களது பார்வைக்கு வைத்தார். 18 புதிய தேர்வு செய்யப்பட்ட ஓவியங்களைக் கொண்டு அருங்காட்சியகம் அமைத்துள்ளார். இது வழக்கமான ஆர்ட்

கேலரி போன்று இல்லாமல் அங்குள்ள ஓவியங்களுடன் விளையாடி மகிழும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, சிம்பான்சியுடன் செல்பி எடுக்கலாம், ஆஸ்கார் அவார்டை ஆஸ்கார் இடமிருந்து பெறலாம், யானையுடன் கயிற்றில் நடை பழகலாம். இது ஆப்டிகல்ஸ் இல்யூசன் கிளிக் ஆர்ட் அருங்காட்சியகத்தின் மையமாகும்.

தந்திரக்கலை ஓவியங்களில் சில, **இப்போது சிறந்த அவார்டை பெறுபவர், நீங்களும் தேவதைகளே, டால்பினும் நானும், நடுவுல கொஞ்சம் கதவ காணோம், நீ என்ன பெரிய அப்பா டக்கரா, வெனிஸ் ஒன்றும் தூரமில்லை, மோனாலிசாவுடன் காபியும் இசையும், செல்ஃபி புள்ள, மண்டைத் தீவு போன்றவையாகும்.** இது போன்று கிளிக் ஆர்ட் அருங்காட்சியகத்தில் 24 ஓவியங்கள் அமைந்துள்ளன.



இந்தியாவின் தலைச்சிறந்த விஞ்ஞானி ஏவுகணை நாயகன் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் நினைவாக இராமேஸ்வரம் பேக்கரும்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபத்தில் ஏ.பி.ஸ்ரீதர் அவர்களின் 95 படைப்புகள் இடம் பெற்றுள்ளன. ஓவியங்களோடு அப்துல்கலாமின் 2 சிலிகான் சிலைகளையும் உருவாக்கியுள்ளார். உலகின் முதல் சிலிக்கான் மியூசியத்தை உருவாக்கிய சிறப்புக்குரியவர். தனக்கே உரிய தனி பாணியில் ஓவியங்களை வரைந்து சிறந்து விளங்கும் ஓவிய நாயகன் ஆவார்.

**வெ. சுஷ்மிதா, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு.**

# ஓவியங்களின் வகைகள்

மனிதன் குகைகளில் வாழ்ந்த காலத்திலேயே ஓவியம் தீட்டத் தொடங்கிவிட்டான். தான் கண்ணால் கண்ட ஒரு காட்சியைத் தனது மனதில் பதிய வைத்துக் கொண்டு அதனைப் பிறர் காணும் வகையில் பாறைகளில் எழுதிக் காட்டி ஓவியத்தைக் கலையாக்கினான். ஒன்றைப்பற்றியது, ஒன்றை ஒத்திருப்பது, பொருந்தியிருப்பதே ஓவியம் ஆகும்.

ஓவியம் காண்போரின் கண்களையும் கருத்தையும் கவரும் தன்மையுடையது. ஓவியம் நுண்கலைகளுள் முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

ஓவியங்கள் குகை ஓவியம், சுவர் ஓவியம், துணி ஓவியம், ஓலைச்சுவடி ஓவியம், செப்பேட்டு ஓவியம், கண்ணாடி ஓவியம், தாள் ஓவியம், கருத்துப்பட ஓவியம் எனப் பல வகைபடுத்தப்படுகிறது.

**சுவடி ஓவியம்**




ஓலைச்சுவடிகளில் எழுத்தாணி மற்றும் தூரிகைகள் கொண்டு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. எழுத்தாணிக்கொண்டு பெரும் முயற்சியுடன் வரையப்பட்ட கோட்டோவியங்கள் அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தர்மபுரி

அகழ் வைப்பகம் ஆகிய இடங்களில் உள்ளன. ஓலைச்சுவடி ஓவியத்தில் பெரும்பாலும் புராண, இதிகாசக் காட்சிகளே வரையப்பட்டுள்ளன.

**செப்பேட்டு ஓவியங்கள்**

செப்பேடுகள் மன்னர்களின் ஆட்சி காலத்தில் அரசு ஆவண ஆணைகளைப் பொறித்து ஆவணப்படுத்தும் கருவியாக இருந்தது. கோயில்கள் அரண்மனைகளில் உள்ள செப்பேடுகளின் வழி மன்னர்களின் வரலாறுகளையும் அறிகிறோம். இதனைப் போன்றே உளிகளைக் கொண்டு வரைகோடுகளாகச் செப்பேடுகளில்



ஓவியங்களை வரைந்தனர். பொதுவாக நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள் போன்றவை வரையப்பட்டன.

**தந்த ஓவியங்கள்**

யானைத் தந்தங்களின் மீது வரையப்படும் ஓவியங்கள் தந்த ஓவியங்கள் எனப்படும். வயது முதிர்ந்து இறந்த யானையின் தந்தங்களின் மீது பலவகையான வண்ணங்களைப் பயன்படுத்தி



ஓவியங்கள் வரைவர். இத்தகைய தந்த ஓவியங்கள் அதிக அளவில் கேரள மாநிலத்தில் உள்ளன.

**துணி ஓவியங்கள்**

துணியில் ஓவியங்கள் வரையும் முறையில் பயன்படுத்தும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி, படாம் எனப் பல பெயர்களில்

அழைப்பர். சீவக சிந்தாமணிக் காப்பியத்தில் துணி ஓவியம் குறித்த குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. குணமாலை யானையைக் கண்டு அஞ்சியக் காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்படுகிறது.



தற்காலத்தில் கலம்காரி ஓவியம் என அறியப்படுபவையே முந்தய துணி ஓவியம். கலம்காரி ஆந்திராவின் பழமையான கலையாகும். கலம்காரி என்பது பாரசீக மொழிச்சொல் கலம் என்றால் பேனா காரி என்றால் கலைவடிவம் பேனாவால் செய்யப்படும் கலைவடிவம் ஆகும்.

இத்தகைய ஓவியங்கள் காளஹஸ்தி கோயிலின் திரைச்சீலைகளில் காணலாம்.

**சு. அருணிமாதேவி**

**இளங்கலைதமிழ், இரண்டாமாண்டு**

# நூல் நயம் பாராட்டல்

## ஓவியம் - தேடல்கள் புரிதல்கள்




நவீன ஓவியங்கள் குறித்த நூல்கள் தமிழில் குறைவு. அதிலும் மேற்கத்திய ஓவியங்களின் வகைமை மற்றும் சிறப்புகள் குறித்து எழுதப்பட்ட நூல்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவு. ஓவியர்

கணபதி சுப்பிரமணியம் ஓவியம் – தேடல்கள் புரிதல்கள் எனும் நூலை இரண்டு பகுதிகளாக எழுதியிருக்கிறார்.

முதல் தொகுதியில் ஆழ்ந்த தத்துவார்த்தமான பார்வைகள், நவீன ஓவியங்களின் போக்கு அதன் அடித்தளம் குறித்த கருத்துகளை குறிப்பிடுகிறார். நவீனப் படைப்புகளையும் பண்டையக்காலப் படைப்புகளையும் ஒரே நேர்க்கோட்டில் எப்படி எதிர்கொள்வது, படைப்புக்கான காரணங்கள் என்ன, படைப்பாளியின் நோக்கங்கள் எவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் கூறுவதாக இந்நூல் அமைகிறது. ஓவிய இலக்கணக் கோட்பாடுகள் மற்றும் கட்டமைப்பினை முதல் தொகுப்பு அறிமுகப்படுத்துகிறது.




ஓவியங்களின் அடிப்படைகள், ஓவியத்தினை ரசிக்கும் விதம். அழகியல் கோட்பாடுகள். உலகப்புகழ் பெற்ற ஓவியர்களின் ஆளுமைகள் என்று ஓவிய உலகின் முப்பரிமாணத்தையும் விவரிப்பதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

சுயமாக ஓவியம் கற்றுக் கொண்டு நவீன ஓவியராகத் திகழும் கணபதி சுப்பிரமணியம், தனது தீவிர கலை ஈடுபாட்டின் வெளிப்பாடாக இந்நூலைக் கொண்டு வந்திருக்கிறார்.

**வெ. பிரியங்கா**

**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## அறிவோம் கலைஞரை

# ஓவியர் எஸ். தனபால்



இவர் 1919இல் சென்னை மயிலாப்பூரில் நடுத்தரக் குடுபத்தில் பிறந்தார். ஸ்கூல் ஆப் ஆர்ட் அண்டு கிராப்ட்சு கல்லூரியில் 4 ஆண்டுகள் பயிற்சி முடித்து அதே கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னை கலை மற்றும் கைவினைக் கல்லூரியில் 1940 முதல் 1977 வரை பணியாற்றி முதல்வராக ஓய்வு பெற்றார்.

தென்னிந்தியாவின் நவீன ஓவியச் சிற்ப இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். சென்னை ஓவியக் கல்லூரிக்கும், அனைத்து இந்திய நவீன ஓவியச் சிற்ப இயக்கத்திற்கும் பெரிய அளவில் பங்காற்றியவர். அவருடைய 60 ஆண்டு கால ஓவிய வாழ்க்கையில் அவரிடம் பயிற்சி பெற்று, பிற்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய ஓவியர்கள் பலர். 1962இல் சிறந்த சிற்பத்திற்காக அவருக்குத் தேசிய விருது வழங்கப்பட்டது. 1980இல் தில்லி லலித்கலா அகாதெமி 'பெல்லோ ஆப் தி அகாதெமி' என்னும் விருதை வழங்கிச் சிறப்பித்தது.

திரு. தனபாலின் ஓவியங்களும் சிற்பங்களும் சென்னைத் தேசியக் கலைக்கூடம், புது தில்லி நவீனக் கலை தேசிய காலரி, புதுதில்லி பாராளுமன்றம் ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளன. 2007ஆம் ஆண்டில் அவருடைய சிறந்த 52 ஓவியங்கள் இலண்டனில் உள்ள நோபிள் சேஜ் ஆர்ட் காலரியால் கவுரவிக்கப்பட்டது.

**மு. சந்தியா**
**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# ஓவிய மலரால் சாதனை

## 6057.92 சதுர அடி ஓவியம்

மோனிஷா ரவி கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் உளியம் பாளையம் பகுதியைச் சேர்ந்தவர். இவர் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் எம்.பி.ஏ படித்து வருகிறார். 2020ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று தனியார் கல்லூரியில் நடைபெற்ற உலக சாதனைப் போட்டியில் பங்கு பெற்று தனி நபராக 13 மணி நேரத்தில் 6057.92 சதுர அடிகள் தொடர்ந்து ஓவியம் வரைந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.



## 4520 சதுர அடியில் பூக்கள் ஓவியம்

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜோஹன்னா பாஸ்போர்டு இளம் வயதில் இருந்தே படம் வரையும் ஆர்வம் கொண்டவர். வயது வந்தோருக்கான வனவிலங்குகள் மற்றும் மலர்கள் தொடர்புடைய வண்ண புத்தகங்களின் மூலம் புகழ் பெற்றவர். இவர் கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியாகத்



தரையில் 12 மணி நேரத்திற்குள் 4520 சதுர அடியில் கருப்பு வெள்ளை நிற பூக்களை வரைந்து கின்னஸ் சாதனைப் படைத்தார். இதற்கு முன்பு தனிநபர் வரைந்த மிகப்பெரிய ஓவியத்தில் திருப்பதியைச் சேர்ந்த அமன்சிங் குலாட்டி என்பவர் 4416 அடியில் வரைந்ததை முறியடித்து ஜோஹன்னா சாதனைப்படைத்தார்.

**து. லீலாவதி, இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு.**

## விடுகதைகள் – விடைகள்

**1. ஓவியம் 2. கோலம் 3. சோப்புக்குமிழ் 4. முயல் 5. தேனீ**

## கவிதைகள்

## ஓவியத்தின் பிம்பங்கள்

**உருவம் தெரியாத**
**பிள்ளையின் முகத்தை**
**விரல் நுனியால்**
**வயிற்றைத் தொட்டே**
**வரைந்துவிடுகிறாள்**
**தாயும் ஓவியம் தான்**
**சேயும் ஓவியம் தான்**
**பிடிக்கத் தெரியாமல்**

**பென்சிலை கையில்**
**பிடிக்கிறது குழந்தை**
**வெள்ளைக் காகிதம்**
**முழுவதும் கிறுக்கல் தான்**

திருத்தங்கள் தேவைப்படவில்லை
கிறுக்கலும் ஓவியம் தான்
கிறுக்கியவளும் ஓவியம் தான்
வானவில்லை வடித்து
மயிலிறகின் சாயமெடுத்து
கற்பனை பிம்பத்தைக்
கண்முன்னே காட்டினானே
பல வண்ணங்கள்
நிறம் பூசின
ஓவியன் படைத்த நிறமற்ற
நிழலிற்கும்!!
இரவின் இருளைத் திருடி
பிறை நிலவின் ஒளியைச்
சிறிது தெளித்து....
வேறு வண்ணம்
தேவையற்றது என்றெண்ணி
ஓவியனும் படைத்தான்
கற்பனை பிம்பத்தைக்
கருமையும் வெண்மையும் சேர்ந்தன
ஓவியனின் நிறமற்ற நிழலிற்கு!!

சா. யோகேஸ்வரி
முதுகலைத் தமிழ்
முதலாமாண்டு

# ஓவியம்



உன் ஓவியம் எத்தனை அழகு
என்னைக் கவர்ந்து இழுக்கின்றன
கண்ணைக் கவரும் காட்சிகள்
என் மனதினைக் கவர்கின்றன
சிந்தனையில் உள்ளவனைச்
சுவரில் வரைந்தேன் – அவன்
என்னைக் கவருகிறான்
அவனுக்கு உயிர் கொடுத்தேன்
அவன் என்னுள் வாழ்கின்றான்
ஒரு கற்பனை மனிதனாக

**இரா. செல்வராணி**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

# ஒளிவடிவ ஓவியமே

எழுத்தில்லா இலக்கியம் நீதானே!
ஒளிவடிவ ஓவியமே!
எண்ணத்தின் வண்ணம் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
மனம் சொல்லும் மந்திரம் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!

**வெ. விசித்ரா**
**இளங்கலை ஆங்கில இலக்கியம் மூன்றாமாண்டு**



சொல்லில்லா பொருளும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
கை பேசும் மொழியும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
கைப்புனையும் கலையும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
மெய் சொல்லும் பொய்யும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
மெய் சொல்லும் மெய்யும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
உயிரில்லா உயிரி நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
உணர்வில்லா உணர்வும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
ஒலியில்லா ஓசை நீதானே
ஒளிவடிவ ஓவியமே!
உளியில்லா சிலையும் நீதானே
ஒளிவடிவ ஓவியமே!

கு. அஷ்விதா
இளமறிவியல்
கணிதவியல்
முதலாமாண்டு

**பா. லோகேஸ்வரி**

**இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு**

# அறிவியல் செய்திகள்

ஓவியம் என்பவை மக்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டுவதோடு நில்லாது அறிவியல் துறை சார்ந்தவைகளையும் ஓவியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஒரு தகவலை எளிய முறையில் புரிய வைக்க ஓவியங்களே பெரிதும் துணைபுரிகின்றன. அறிவியலின் பல்வேறு துறைகளில் இயங்குபவர்கள் உருவாக்கும் சித்திரங்களுக்குக் கடந்த 20 ஆண்டுகளாக ‘வெல்கம் இமேஜ் அவார்ட்ஸ்’ எனும் விருது வழங்கப்பட்டு வருகிறது.





அறிவியல் தொடர்பான, அறிவியல் ஆய்வுகள் தொடர்பான ஒளிப்படங்கள், வரைகலைச் சித்திரிப்புகள், ஓவியங்கள் போன்றவற்றுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான விருதுக்காக 22 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்களைக் கொண்டு இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அந்த ஓவியங்களிலிருந்து சில, சாம்பல் கிளியின் இரத்த மண்டலம் இரு பரிமாண சிடி ஸ்கேன்களின் மாதிரியைக் கொண்டு வரையப்பட்டது. மற்றொன்று பூனைத் தோலையும் அதில் ரத்த ஓட்டத்தையும் சித்திரிக்கும் ஓவியம். இது நுண்ணோக்கியின் நமுவத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஒளிப்படம். நாற்பதுக்கும் மேற்பட்ட படங்களை ஒருங்கிணைத்து இந்த ஓவியத்தை உருவாக்கி இருக்கிறார்கள். பூனையின் ரோமங்கள் மஞ்சள் நிறத்திலும் ரத்தக் குழல்கள் கறுப்பு நிறத்திலும் இந்த ஓவியத்தில் பதிவாகியிருக்கின்றன.

மத்திய கால மருத்துவ முறைகளைக் கேலி செய்யும் ஓவியமாக அமைகிறது. இரசவாதிகள் முதல் கொடூரமான மருத்துவர்கள் வரை அனைத்து



மருத்துவ முறைகளின் குறைகளையும் இந்த ஓவியம் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

ஓவியம் அனைத்துத் துறைகளுக்கும் சொந்தமானது ஆகும். எவற்றையும் எளிதில் மனதில் பதிய வைக்கும் தன்மை கொண்டது. ஆகவே ஓவியங்கள் அறிவியல் துறையிலும் ஆட்சி செய்கின்றன.

**ரா. பிரியதர்ஷினி**
**இளங்கலைத் தமிழ்**
**இரண்டாமாண்டு**

## விடுகதைகள்

1. எண்ணத்தை விதைத்து வண்ணமாய் அறுவடை செய்வது எது?
2. தங்கைத் தீட்டிய ஓவியம் தரையில் தவழ்கிறது?
3. காற்றிலே பறந்து போகும் கண்ணாடிக் கூண்டு, கைப்பட்டால் உடைந்து போகும் கண்ணாடிக் கூண்டு அது என்ன?
4. பட்டு வண்ண உடம்புக்காரன், பஞ்சு வண்ண நிறத்துக்காரன், தூங்கித் தோற்ற வரலாற்று கதாநாயகன் அவன் யார்?
5. சிறுக கட்டிய சிங்கார வீட்டைச் சீண்ட விடமாட்டாள் இந்த ரோஷக்காரி. அவள் யார்?

வெ. அபிராமி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு.

### சொல் விளையாட்டு

**ஓவிய வகைகளைக் கட்டத்தில் கண்டறிக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு | டை | வி | சு | கு | ந | வீ | ன | ந் | க |
| ஓ | கை | ய | வ | ர் | கை | வி | ஓ | ண் | த |
| து | ணி | ஓ | வி | ய | ம் | பே | ணா | த | ந் |
| க | ழ | ம் | வி | ம் | ம் | டி | செ | ப் | த |
| ற | த | வீ | ய | ய | ஓ | ப் | கூ | த | ஓ |
| ஞ | ச | ன | வி | வி | ம் | ப | ண் | ரை | வி |
| சு | ணி | டோ | ய | ஓ | ஓ | ட | ல | வ | ய |
| து | ட் | ம் | ய | ர் | ரை | ள் | ர | ண் | ம் |
| கோ | ள | வி | ப | வ | ம | ந் | தா | த | து |
| ங | ஓ | ழு | வ | சு | கோ | ட் | டு | டி | எ |

**வி. மாரிகவிதா**

**இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு**

# பொன்மொழிகள்

- உலகம் இன்று அர்த்தமுள்ளதாக இல்லை. எனவே நான் என் அர்த்தமுள்ள படங்களை வரைய வேண்டும். – **பாப்லோ பிக்காசோ**
- ஓவியம் என்பது பார்க்கும் கவிதை, கவிதை என்பது கேட்கும் ஓவியம். – **லியோனார்டோ டா வின்சி**
- கலைஞர் பொய்யர் ஆனால் கலை என்பது உண்மை. – **ஆண்ட்ரே மௌரோயிஸ்**
- நல்ல கலைஞர்கள் நகலெடுக்கிறார்கள், சிறந்த கலைஞர்கள் கடவுளிடமிருந்து யோசனைகளைத் திருடுகிறார்கள். – **பாப்லோ பிக்காசோ**
- கலைஞன் என்றால் விற்கக்கூடிய ஒன்றை எழுதுபவன். தான் எழுதுவதை விற்பவனே நல்ல கலைஞன். – **பாப்லோ பிக்காசோ**

**தே. ஜனனி**

**இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## தெரிந்து கொள்வோம் - வேறுபெயர்கள்

- ஓவியம் - ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம்,படாம், வட்டிகைச் செய்தி
- ஓவியம் வரைபவர் - கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவாமாக்கள், கிளவி வல்லான், சித்திரக்காரர், வித்தகர்.
- ஓவியக் கூடம் - எழுதெழில் அம்பலம், எழுத்து நிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திர மாடம், சித்திரமண்டபம், சித்திர சபை

# தகவல் களஞ்சியம்



❖ கரித்துண்டை வைத்து ஓவியம் வரைந்தவர் யார்?
**வின்சென்ட் வில்லியம் வான்கா**



❖ 1931ஆம் ஆண்டில் புரட்சிகர ஓவியராக இருந்த இந்தியப் பெண் ஓவியர் யார்?
**அமிர்தா ஷெர்கில்**

❖ சிஸ்டின் சேப்பல் என்ற ஓவியம் எந்த அருங்காட்சியகத்தில் உள்ளது?
**வத்திக்கான்**

❖ சங்க கால ஓவியங்களை எவ்வாறு அழைத்தனர்?
**கண்ணெழுத்து**

❖ நாட்காட்டி ஓவியங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
**பசார் பெயிண்டிங்**

❖ காலண்டர் ஓவியங்களின் பிதாமகனாக அறியப்படுபவர் யார்?
**கொண்டைய ராஜூ**

❖ ஓவியக்கலை குறித்த பல்வேறு தகவல்களைக் கொண்ட இணைய ஓவியக் கலைக்களஞ்சியம் எது?
http://www.artcyclopedia.com

**கு. அனிதா**
**இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு**

# சொல் விளையாட்டு - விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு | டை | வி | சு | கு | ந | வீ | ன | ந் | க |
| ஓ | கை | ய | வ | ர் | கை | வி | ஓ | ண் | த |
| து | ணி | ஓ | வி | ய | ம் | பே | ணா | த | ந் |
| க | ழ | ம் | வி | ம் | ம் | டி | செ | ப் | த |
| ற | த | வீ | ய | ய | ஓ | ப் | கூ | த | ஓ |
| ஞ | ச | ன | வி | வி | ம் | ப | ண் | ரை | வி |
| சு | ணி | டோ | ய | ஓ | ஓ | ட | ல | வ | ய |
| து | ட் | ம் | ய | ர் | ரை | ள் | ர | ண் | ம் |
| கோ | ள | வி | ப | வ | ம | ந் | தா | த | து |
| ங | ஓ | ழு | வ | சு | கோ | ட் | டு | டி | எ |

## இலக்கியங்களில் ஓவியச் செய்திகள்

- 'ஓவியர் தம் பாவையினோ டொப்பரிய நங்கை' – சீவகசிந்தாமணி.
- 'ஓவியப் பாவை யொப்பாள்' – சீவகசிந்தாமணி.
- 'ஓவியத்து எழுத ஒண்ணா, உருவத்தாய்' – கம்பராமாயணம்.
- 'கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன் தீட்டினான் கிழிமிசைத் திலகவள் நுதல்' – சீவகசிந்தாமணி.
- 'ஓவுறழ் நெடுஞ்சுவர்' – பதிற்றுப்பத்து.
- 'ஓவியத்துறை கைபோய ஒருவனை' – நைடதம்.
- 'ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்' – மணிமேகலை.
- 'புனையா ஓவியம் கடுப்ப' – நெடுநல்வாடை.

**பா. சுகன்யா**
**முதுகலைத் தமிழ், முதலாமாண்டு**



## ராஜா ரவிவர்மா

- ராஜா ரவிவர்மா அவர்கள் 1848ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் கிளிமானூர் அரண்மனையில் பிறந்தார்.
- அரண்மனை ஓவியரான ராமசாமி நாயுடு அவர்களிடம் தண்ணீர் ஓவியத்தைக் கற்றுக் கொண்டார்.
- ஆங்கிலேய ஓவியரான, தியோடர் ஜென்சன் அவர்களிடம் எண்ணெய் ஓவியங்களைக் கற்றுக் கொண்டார்
- நவீன ஓவிய மரபை இந்திய ஓவியக்கலையில் அறிமுகம் செய்தார்.
- இவரது புகழ் பெற்ற ஓவியங்களில் சில சகுந்தலா ஓவியம், தமயந்தி அன்னப் பறவையுடன் உரையாடும் ஓவியம், அர்ஜுனன் மற்றும் சுபத்ரா ஓவியம், ஒரு பெண் பழத்துடன் நிற்கும் ஓவியம், பிச்சைக்காரக் குடும்ப ஓவியம் ஆகியவை ஆகும்.
- இந்தியாவில் மைசூர், பரோடா, குவாலியர் மற்றும் ராஜபுதன அரண்மனைகளில் இவரது ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.
- திருவாங்கூர் மகாராஜாவின் உருவத்தைச் சிறப்பாக வரைந்தமைக்கு "வீர ஸ்ருங்கலா" எனும் உயரிய விருதினைப் பெற்றார்.
- ராஜா ரவிவர்மா அவர்கள் தனது 58ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

**பா. பவித்ரா**
**இளங்கலைத் தமிழ்**
**இரண்டாமாண்டு**

ஜெ. ஷெலின்
இளங்கலை ஆங்கிலம்
இரண்டாமாண்டு





மோ. தீபா,
இளங்கலைத்தமிழ்
இரண்டாமாண்டு

ப. தமிழரசி, கணினிப் பயன்பாட்டியல் முதலாமாண்டு





என். கீர்த்திகா
இளம் வணிகவியல்
இரண்டாமாண்டு.

ப. சுமையா





து. லீலாவதி
இளங்கலைத்தமிழ்
முதலாமாண்டு

சே. பிரியங்கா,
இளமறிவியல்
உயிர்வேதியியல்





ஐ. வனிதா
இளங்கலைத்தமிழ்
முதலாமாண்டு

# துறை நிகழ்வுகள்

*12.04.2022* திருக்குறள் விழா

*01.05.2022* அனைத்துலகத் திருக்குறள் மாநாடு

*25.05.2022* விவேகானந்தர் வாசகர் வட்டம் திறந்த புத்தகத் தேர்வு

















முன் அட்டை - ச. சரண்யா, வணிகவியல், இரண்டாமாண்டு
பின் அட்டை – கோ. மகாலட்சுமி, இளமறிவியல் கணினியியல், இரண்டாமாண்டு

# தமிழ்த்துறை

## சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு


**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.